| | |
|---|---|
| **Publication** | Theekkthir |
| **Edition** | Chennai |
| **Date** | 05/01/2011 |
| **Page** | 06 |

# 52வது தேசிய கணக்காளர்கள் மாநாடு,கருத்தரங்கம்

சென்னை, ஜன. 5 -

நிர்வாக வரவு செலவுகளை பராமரிக்கும் கணக்காளர்களின் 52வது தேசிய மாநாடு சென்னையில் ஜன.6 முதல் 8 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தி இன்ஸ்டியூட் ஆப் காஸ்ட் அன்ட் ஓர்க்ஸ் அக்கவுண்டன்ஸ் ஆப் இந்தியா அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. நிறுவனங்களின் நிர்வாக செலவுகளை கட்டுப்படுத்தி லாபகரமாக நடத்த வழிகாட்டும் கணக்காளர் பணி இன்று சந்திக்கும் சவால்களை எப்படி எதிர்கொள்வது? நவீன முறையில் கணக்குகளை பராமரிப்பது எப்படி என்பது குறித்தும் அரசாங்கத்தின் புதிய சட்ட திட்டங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று அமைப்பின் தலைவர் பிரிஜ்மோகன் ஷர்மா தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் வி.நாராயணசாமி, ஆந்திரபிரதேச மாநில பத்திரப்பதிவுத் துறை அமைச்சரும் கணக்காளருமான தோட்ட நரசிம்மன்,இந்திய உருக்கு ஆணையக தலைவர் சி.எஸ். வர்மா, யுனைடெட் இந்தியா நிறுவன தலைவர் ஜி.சீனிவாசன், தேசிய சிறு தொழில்கழக தலைவர் ஹெச்.பி.குமார் உள்பட பலர் கலந்து கொண்டு பேசவுள்ளனர்.

தொழில்நுட்ப கருத்தரங்கில் நடைமுறை அனுபவங்களை கணக்காளர்கள் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.